2019 ஜூலை 2]

13—

உயர்மின் கோபுர விளக்கு

***3078—திரு. ஐ.எஸ். இன்பதுரை:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, நவ்வலடி கிராமம், திசையன்விளை உவரி சாலை சந்திப்பில் உயர்மின் கோபுர விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ராதாபுரம் தொகுதி, நவ்வலடி கிராமம், திசையன்விளை உவரி சாலை சந்திப்பில் உயர்மின் கோபுர விளக்கு அமைத்தல் தொடர்பாக, அப்பகுதியின் போக்குவரத்து வளர்ச்சி மற்றும் மக்கள்தொகைப் பெருக்கம் ஆகியவற்றின் அடிப்படையில், எதிர்காலத்தில் தேவைக்கேற்ப உயர்மின் கோபுர விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.*

திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

'தேடிச் சோறுநிதந் தின்று—பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி—மனம்
வாடித் துன்பமிக உழன்று—பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து—நரை
கூடிக் கிழப்பருவமெய்தி—கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின்மாயும்—பல
வேடிக்கை மனிதரைப் போலே—நான்
வீழ்வே னென்று நினைத்தாயோ?'

என்று பாடிய பாரதி பிறந்த மண்ணிலேயிருந்து நான் வந்திருக்கிறேன். இன்னொரு பாடல் இருக்கிறது. புரட்சித் தலைவர் அவர்களுடைய பாடல்.

'வீட்டுக்கெல்லாம் வெளிச்சம்போட கொடுத்த
பணத்திலே
தாங்கள் வெளிச்சம் போட்டு வாழ்ந்துவிட்டார் நகர
சபையிலே'

என்றொரு பாடல் இருக்கிறது. இந்தப் பாடலை அவர் பாடுகின்றபோது அவர் நாடோடி மன்னனாகத்தான் இருந்தார். ஏழையெளியவர்களுக்கும் மின்சாரம் கிடைக்க வேண்டும் என்று அப்போது ஒரு திட்டம் போட்டார். குடிசைகளிலும் விளக்கு எரிய வேண்டும் என்பதற்காக ஒரு திட்டம் போட்டார். (குறுக்கீடு) அவர் தமிழ்நாட்டினுடைய மன்னாதி மன்னனாக வருகிறபோது . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடு)

திரு. ஐ.எஸ். இன்பதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உறுப்பினர் பேசுகிறபோது இடையூறு செய்வது என்பது சட்ட விதிகளுக்கு முரணானது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, நீங்கள் கேள்வி கேளுங்கள். (குறுக்கீடு)

திரு. ஐ.எஸ். இன்பதுரை: அவர் மன்னாதி மன்னனாக வருகிறபோது, ஒரு சட்டம் போட்டார். என்ன சட்டம் போட்டார் என்றால், குடிசைகளுக்கும் குண்டு பல்பு ஒன்றைக் கொடுத்தார். தினசரி சூரியன் உதித்தாலும்கூட, ஏழையெளியோர்கள் வீட்டிற்கு வெளிச்சத்தைத் தந்தது, ஒளி விளக்கு என்று நம்மால் அன்போடு அழைக்கப்படுகின்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஒளி விளக்கின் பெயரைச் சொல்லி, ஒளி விளக்கினுடைய ஆட்சி இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவேதான், என்னுடைய சொந்த ஊராக இருக்கின்ற நவ்வலடி கிராமத்திற்கு உயர்மின் கோபுர விளக்கைத் தருவேன் என்று இருளிலே தவிக்கின்ற எங்களுடைய ஊர் மக்களுடைய நெஞ்சப் பாத்தியிலே வெளிச்சப் புள்ளிகளை

இன்றைக்கு விதைத்திருக்கிறார். அவருக்கு என்னுடைய கன்னித் தமிழ் கொண்டு கற்பூர ஆராதனையை நன்றியாகத் தெரிவித்து, அமைகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதில் நீங்கள் என்ன கேட்கப் போகிறீர்கள்? மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என்ன கேள்வியை கேட்கப் போகிறீர்கள்?

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, high mast lighting வசதி செய்து கொடுப்பது சம்பந்தமாக கேள்வி கேட்க விரும்புகிறேன். MLA fund–லிருந்து, இங்கே ஒரு high mast lighting போடுங்கள், high mast lighting போடுங்கள் என்று எங்களிடம் கேட்கிறார்கள். MLA fund–லிருந்து இதைப் போட முடியாது. ஆனால், MP fund–லிருந்து போட முடியும். சிறியதாகப் போடுவதற்கு 3 இலட்சம் ரூபாய், 4 இலட்சம் ரூபாய் செலவாகும். தேவைப்படும்பட்சத்தில் MLA fund–லிருந்து உயர்மின் கோபுர விளக்கு அமைத்துக் கொள்வதற்கு அரசு அனுமதிக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேட்ட கேள்விக்கு, 2006–2011 காலக்கட்டத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தார், அப்போது உயர்மின் கோபுர விளக்குகளைக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில் நானும் சட்டமன்ற உறுப்பினராக இருந்தேன். உயர்மின் கோபுர விளக்குகளுக்கு அதிகமான மின்பளு தேவைப்படுகிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி வந்ததற்குப் பிறகு மின்வெட்டு அதிகமாக இருந்த சூழ்நிலையில் அந்த norms மாற்றப்பட்டது. இப்பொழுது தேவையான அளவிற்கு மின் சேமிப்பு இருக்கின்றது. இன்றைக்கு தமிழகத்தில் LED உயர்மின் கோபுர விளக்குகள் உள்ளன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மின்சார சேமிப்பிற்காக, அனைத்து தெருக்களிலும் இருக்கக்கூடிய விளக்குகளையெல்லாம் LED விளக்குகளாக மாற்ற வேண்டும் என்று 2017 ஆம் ஆண்டு கொள்கைரீதியாக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

[2019 ஜூலை 2

முற்பகல் 10–35

நமது தமிழகத்தில் தெரு விளக்குகள் மொத்தம் 43 இலட்சத்து 61 ஆயிரம் இருக்கின்றன. அதிலே கிட்டத்தட்ட 23 இலட்சத்து 63 ஆயிரம் விளக்குகள் இப்போது LED விளக்குகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. அப்படி மாற்றியதால் மட்டும் ரூ.446 கோடி இதுவரையிலும் சேமிப்பு ஏற்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவரின் கருத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, கண்டிப்பாக பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

14—

கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம்

***16592—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் பேரூராட்சியில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ் மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் பேரூராட்சியில் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்று மாண்புமிகு காட்டுமன்னார்கோவில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். காட்டுமன்னார்கோவிலிலிருந்து சுமார் 27 கிலோ மீட்டர் தொலைவில், சிதம்பரத்தில் ஒரு கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையமும், காட்டுமன்னார்கோவிலைச் சுற்றி 6 விற்பனை நிலையங்களும் இருக்கிற காரணத்தால் காட்டுமன்னார்கோவில்